RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22s542

OPEN ACCESS

# பாரதிதாசன் - கவிதை நாடகங்களில் திராவிடக் கருத்தியல்

அ. குருமூர்த்தி [அ, *]

[அ] தமிழ்த்துறை, ஸ்ரீ வாசவி கல்லூரி (சுயநிதிப்பிரிவு), ஈரோடு- 638316, தமிழ்நாடு, இந்தியா

# Bharathidasan's Dravidian Ideology in Poetic Plays

A. Gurumoorthi [a, *]

[a] Department of Tamil, Sri Vasavi College (Self Finance), Erode–638316, Tamil Nadu, India

* Corresponding Author: gurualv@gmail.com

Received: 08-08-2021
Revised: 13-06-2022
Accepted: 10-07-2022
Published: 25-08-2022

Check for updates

## ABSTRACT

The extensive use of his ideas through drama has been continuous since time immemorial. The structure of the play is what man created for the rest of time in the form of a story based on his fantasies. Bharathidasan's plays are a repository of all Dravidian ideologies such as self-respect, rationalism, feminist emancipation, communism, brahmanism, and denial of God. Of these, what we have taken into consideration are the Veera Thai drama, which explains that women are a symbol of heroism, the sea-top bubble drama that deals with communist ideas, and the play Puthukkaradi, which explains how the Aryans who changed Tamil culture introduced their ideas into Tamil Nadu.

**Keywords:** Bharathidasan, Diravidam, Veerathai, Dravidian Ideology

## முன்னுரை

இந்திய நாடகங்களின் மரபு என்பது பாணர், கூத்தர், ஆகியவர்களிடம் இருந்து தோன்றுகிறது என்பர் ஆய்வாளர்கள். அதோடு தென்னிந்தியாவின் நாடக மரபுகள் வேறெங்கும் காணக்கிடக்காத ஒரு புதுவகையான நாடக அமைப்பாகும். சங்க காலத்தில் காணும் பெரும்பாணர், சிறுபாணர் தொகை நூல்களைக் கொண்டு இம்மரபின் வேராக இருந்தது எனலாம். பின்னர் காலத்தில் அடியார்க்கு நல்லார் வாயிலாக ஓரளவே அறிய முடிகிறது. தற்காலத்தில் தமிழ் வரலாற்றில் நாடகமும், பலவகையில் வளர்ச்சி பெற்றுள்ளது. நாட்டு விடுதலை, சுயமரியாதை, தனித்தமிழ், பெண்விடுதலை, இன விடுதலை போன்ற பல கொள்கைகள் உருவான கால மைய்ய நீரோட்டத்தில் கலந்த ஒரு தனித்துவமான ஒன்றாக பாரதிதாசன் நாடகங்களைக் காணமுடிகின்றன.

இளமையில் பாரதிதாசன் பள்ளி நாடகங்களில் முக்கிய நடிகராக இருந்தார். நாடகத்தில் “வசங்கெட்ட மனிதன்” பாடக் கூடாதென “நாடக விமர்சனம்” செய்த பாரதியின் கவிதா மண்டலத்தில் வளர்ந்தவர். அப்போதைய அரசால் தடை செய்யப்பட்ட “இரணியன்” நாடகங்களை எழுதிக் குவிக்கும் இளைஞர்களை உருவாக்கியது. எனவே தான் சேக்ஸ்பியர் போல நடிகராயிருந்து. நாடக மேடை நுணுக்கங்களை அறிந்து திறனாய்வுக் கருத்துக்களைப் புதுமை முறைகளை உணர்ந்து, உணர்வு மிக்க நாடகங்களை எழுதி மற்றோருக்கு வழிகாட்டியாக திகழ்ந்துள்ளார்.

பாரதிதாசன் கால நாடகங்களைக் கண்டு மனம் வருந்தினார். தமிழ்நாட்டு நாடகங்கள் பெரும்பான்மை தனிமனித வழிபாடாகவும், அரசன் அரசி கதைகளாகவும், கடவுள் வழி மூடநம்பிக்கையை வளர்க்கும் தன்மையில் இருந்ததை அவர் கண்டு பயனற்றவை எனக் கருதினார். அதில் வரும் வசனங்கள் கொச்சைத் தமிழில் இருந்ததைக் கண்டு சகிக்க முடியாதவராக இருந்தார்.

இதனால் தனது நாடகத்தில் இன்தமிழைப் புகுத்தினார். மற்ற நாட்டவரோ நாட்டுப்பகை நீங்கவும், வாசிப்பவர் மனதில் புத்தொளி சேர்க்கவும், முடியாததைத் முடிக்கவும், பாராத காட்சியைப் பார்க்கவும், உயர் சிந்தனை கொள்ளவும், பழமையான நிலை நீங்கி நலம் சேர்க்கவும் நாடகம் அமைய வேண்டும் என்றார். இத்தகைய கொள்கைகளைத் தனது நாடகங்களை மூலமாகக் கொண்டார்.

பாரதிதாசன் எழுதிய நாடகங்கள் நமது கண்முன் காட்சிகளைக் கொண்டு வரும் தன்மையினை உடையதாக அமைகின்றன. கவிதை வாயிலாக ஒரு காட்சியினை விளக்கும் தன்மையினைக் காண முடிகிறது. குறிப்பாக ஏழு நாடகங்கள் கவிதை நாடகங்களாக அமைந்துள்ள நிலை குறிப்பிடத்தக்கது.

பாரதிதாசன் நாடகங்களில் சமூக மறுமலர்ச்சி மிகுதியாக இருப்பதைக் காணமுடிகிறது. அரச மணம் கமழும் வரலாற்றுக் கதைகளை அடிப்படையாகக் கொண்டு பகுத்தறிவு சிந்தனைகளைப் புகுத்தியிருக்கிறார். கற்பனை வளம் நிறைந்த பழம்பொருள் கதைகளாக வீரத்தாய், போர் மறவன், ஒன்பது சுவை படைத்துள்ளார். சமூக நாடகங்களாக நல்லமுத்துக் கதை அமைகின்றது. வெறும் உரையாடல் நிறைந்ததாக அமிழ்து எது? என்ற நாடகமும் இருக்கிறது. இத்தகைய கவிதை நாடகங்களைப் பற்றியே இக்கட்டுரையில் காணலாம்.

## வீரத்தாய்

தன் இளம்பிள்ளையான மகன் போர்களம் அனுப்பிய வீரத்தாய்யினை புறநானூறு இலக்கியம் காட்டுகிறது. தமிழ்ப் பெண்கள் வீராங்கனைகளாகவும் வீரப்புதல்வர்களை நினைவூட்டவதாகவே அமைகின்றது. சீவகன் தாய் அனாதையாள் இடுகாட்டில் மயிற்பொறியில் இறங்குகிறாள். தவக்கோலம் பூண்டு மறைந்து வசிக்கிறாள். மகன் முனிவர் ஒருவரிடம் மாமன்னர்களிடம் கலை பயில்கிறான். அவ்னே பின்னர் ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றைப் பெறும் சிந்தாமணியாகிறான். அதுபோல சேனாதிபதியின் சூழ்ச்சியால் நாட்டை இழந்த ஒரு தாய், தன் மகன் இருக்கும் காட்டினில் கிழவராக மாறுவேடம் அணிந்து இக்குழந்தைக்கு போர்திறத்தினை பயிற்றுவிக்கிறாள். ஏன் பெண் பயிற்சி அளிக்கக்கூடாதா? என்றால் பெண்கள் ஆணுக்கு சேவகம் செய்வது மட்டுமே என்று கற்பிக்கப்பட்டது. இத்தகைய மனநிலையைச் சேனாதிபதியின் வாயிலாக உரைக்கிறார்.

"ஆடை, அணிகலன், ஆசைக்கு வாசமலர்

தேடுவதும், ஆடவர்க்குச் சேவித் திருப்பதுவும்,

அஞ்சுவதும் நாணுவதும் ஆமையைப்போல் வாழுவதும்

கெஞ்சுவதும் மாகக் கிடக்கும் மகளிர்குலம்,

மானிடர் கூட்டத்தில் வலிவற்ற ஓர்பகுதி!"

என்று கூறுகிறார் (Bharathidasan, 2009). இதற்கு பதில் அளித்து பேசும் மந்திரி,

"மீனக்

கடைக்கண்ணால் இந்தக் கடலுலகம் தன்னை

நடக்கும்வகை செய்வதெது? நல்லதொரு சக்தி

வடிவமெது?மாமகளிர் கூட்டமன்றோ? உன்சொற்

கொடிது குறையுடைத்து!"

என்று அடிமை என்று நினைக்கும் மனிதர்களுக்கு சாட்டை அடியாக அமைந்துள்ளது (Bharathidasan, 2009).

பெண் என்பவள் அறிவுடையவள். வீரமுடையவள் என்பதனை பாரதிதாசன் தனது படைப்பில் வெளிப்படுத்தியே உள்ளார்.

"அறிவுபெற்ற படியாலே எல்லாம் பெற்றீர்!"

தாய், கிழவனாக அரசாங்கத்தில் வேலையில் அமர்கிறாள். பின்னர் தனது அறிவு தனத்தால் அந்த நாட்டையே தன் மகன் கொண்டு ஆளுகிறாள். பெண்களுக்கு வீரம் எப்படி உண்டாகும் எனக் கேள்வி, பதில் புதிதாகப் புதுமை பயப்பதாக வருகிறது. பெண்களை மட்டும் பெற்றெடுத்தால் அவர்க்கு வீரமிராது என எதிர் கொள்கைக்கு இடங்கொடுத்து விடலாம். ஆனால் ஆண்மை உள்ளதாகக் கூறி இறுமாக்கும் ஆடவரைப் பெற்றெடுத்த தாயக்குலமாயிற்றே அது, வீரமற்றதெனில் பிறந்த ஆண் குலமுன்றோ பீடழியும் எனக் குறிப்பிடுகிறார். முருங்கை மரத்தில் கிளைமட்டும் தேக்காகுமா? கடைசியில் புரட்சிக்கவியில் போலவே குடியரசோங்கிறது. வீரமகன் அரசியல் பிரகடனம் அறைகின்றான் (Bharathidasan, 2009).

எல்லாருக்கும் தேசம் பொது, உடைமைகள் பொது, கல்வி, சுகாதாரம் பொது, சொத்துக்கள் அனைத்தும் நாட்டுமை எனப் பறைசாற்றுகின்றார்.

## கடல்மேற் குமிழி

பாரதிதாசன் தமது காவியங்களெல்லாம் சாதியொழிப்பு, பொதுவுடைமை, குடியரசு என்னும் குறிக்கோள்களைக் கொண்டனவே. இக்கால அரசியல் தொழிலாளர் நிலைகள் இதனில் நன்கு எடுத்துக்காட்டப் படுகின்றன, தொழிலாளர் கிளர்ச்சி வேலை நிறுத்தம் முதலியன. அரசன் மகன் ஏழைப்பெண்ணையும், தாழ்ந்த வகுப்பினன் எனப்படுவோன் அரசகுமாரியையும் மணக்கின்றனர்.

திறல் நாட்டரசன் மகன் வையத்திறல் என்பான் பூக்காரி மகளை மணக்க விரும்புகிறான். சொந்த உறவில் மணந்து கொள்ளும் படி பெற்றோர் உரைக்கின்றனர். தாய் புலைச்சி தந்தை அரசன் ஆகிய பிறவிக் கலப்படம் என அதனையும் மறுக்கிறான் அரசன். கடைசியில் இவ்விரு காதல் மனங்களும் நிறைவேறுகின்றன.

இக்கால நிலையை எடுத்துக் காட்டுவதில் இது ஈடற்ற காவியம். “ஆளப் பிறந்தவரும் தாமும் - மேலானவர் என்பவர் தாமும்

கூளங்கள் அல்லர், கடல்மேல் காணும்

குமிழிகள் அன்னவர் என்பேன்

மாளாப் பெருங்கடல் மக்கள்”

மக்கள் அனைவரும் சரிநிகர் என்பதனைப் பாரதிதாசன் விளக்குகிறார் (Bharathidasan, 2009). விருந்துண்ணும் நிகழ்வில் பொதுவுடைமைச் சிந்தனையை வெளிப்படுத்துகிறார்.

அரசன் விருந்திடுகிறான் அனைவரும் வருகின்றனர். ஆளவந்தார் அனைவரும் பத்தாயிரம் பேர் புத்தம் புதுக்கறிகளுடன் மனம் பூரிக்க உண்டனர். ஏழைப் பணியாளர்கள் காத்துக்கொண்டு இருந்தனர். கூழைக் கரைத்தவுடன் அழைக்கப்பட்டனர். நெய் கலந்த சோற்றைச் சமைத்து தருபவர்கள் தொழிலாளர்கள், ஆனால் அந்த உணவு அவர்களுக்கு கிடைப்பது இல்லை. அவர்களுக்கு கிடைப்பது கூழ். இந்நிலை இங்கு அகற்றப்படுகின்றது.

உயர்ந்த ஆடைகள், பகட்டு வாழ்க்கை என்பது அரசர்களுக்கே உரிய வாழ்க்கை நிலையாக இருக்கிறது. இதனை “அண்மையில் பண்டித நேருவுடன் இந்திராகாந்தி ஓரிடத்தில் மலைவாசிகளுடன் உரையாடிக் கொண்டிருந்தார். மலைக்கிழவி ஒருத்தி, “தங்கே! உன் ஆடைகள் உயர்ந்த நயமுடையனவே, எங்கள் உடையை ஏறிட்டுப்பார்த்தாயா? என்றாளாம். தலைகுனிந்து கண்ணீர் விட்டாராம் இந்திராகாந்தி,” (யனவே, எங்கள் உடையை ஏறிட்டுப்பார்த்தாயா? என்றாளாம். தலைகுனிந்து கண்ணீர் விட்டாராம் இந்திராகாந்தி,” (Govindhasamy, 1957).

குடியாட்சி வருகிறது. ஒவ்வொரு வீட்டுக்கும் அன்று அரச விருந்து. வீடுதோறும் அரிசி பருப்புக் கொடுத்து அகமகிழ்ந்துண்ணச் செய்யும் பண்டைய நாட்டுப்புற வழக்கு வெளிப்படுகிறது. கலப்பு மணம் ஒன்றே நல்வழிக்குக் கைகாட்டி என விளக்குகிறார். உழைக்காதவர்களைத் திருடர்கள் என்று பகருகிறார்.

"உழையானை நோயாளி ஊர்திருடி என்போம்,

கேட்டைஇனி விலைகொடுத்து வாங்கோமே, சாதி

கீழ்மேல்என் றுரைப்பவர்கள் வாழுவது சிறையே!"

பாரதிதாசன் கடவுள் கொள்கைகளில் ஒரு கடவுள் உண்டென்போம், என்று உரைக்கிறார் (Bharathidasan, 2009). உருவத்தை வணங்குதல் இல்லை, சண்டைகளெல்லாம் ஒழிய வேண்டும் என்றால் மதம் ஒழிய வேண்டும். அப்படி ஒழிந்தால் கோயில்கள் தொழிற்சாலைகள் ஆக்கப்படும், பார்ப்பனர்கள் மற்றும் அரசர்கள் அனைவரும் சமம் என்ற நிலை வரும் என்று தனது படைப்புகள் மூலம் வெளிப்படுத்துகிறார்.

## அகத்தியன் விட்ட புதுக்கரடி

தொன்மையான இலக்கண நூல்களில் அகத்தியமும் ஒன்று. இன்று நமக்கு கிடைக்காத நூலில் இதுவும் ஒன்று. அத்தகைய அகத்தியன் எவ்வாறு தமிழில் நுழைந்தான் என்று ஒரு சிறு நாடகமாக அமைக்கப்பட்டுள்ளது. "குள்ளனை அணுவும்நம் பாதே" என்று பழமொழி நமக்கு ஞாபகம் இருக்கும். அதனையே தொடக்கமாக படைத்துள்ளார் பாரதிதாசன்

திராவிட நாடு செழுமையுடன் இருந்தது. அறம் வழுவாத அரசர்கள் இருந்தனர். இலக்கியங்கள் பெரிதும் வளர்ந்து இருந்தன. அகத்தியன் வந்த பிறகு அது தலைகீழாக மாறுகிறது. "செல்வம்முற் பிறப்பிற் செய்தநல் வினைப்பயன்" என்று புதுக்கரடி ஒன்றை பரப்புகிறார். இறந்த பிறகு உடல் மண்ணுலகம் இருக்கிறது உயிர் எங்கே செல்கிறது என்று மன்னன் கேட்கிறான். அதற்கு அகத்தியன் கூறிய பதில்,

"ஆன்மா என்றும் அழியா"

என்று புதுக்கரடி ஒன்றினை கூறுகிறார் (Bharathidasan, 2009). வானில் இருப்போர்களை நாம் மகிழ்விக்க வேண்டுமென்றால் நாம் மந்திரங்கள் கொண்டு யாகம் நடத்த வேண்டும் என்று மொழிகிறான். "விண்ணவர் விருப்புறவேண்டு மானால் மண்ணிடை நான்மறை வளர்ப்பாய் என்றான் மறைமொழி தானே மந்திரம் என்றான்" என்று யாகம் செய்வதற்கு தூண்டுதல் செய்கிறான்.

ஒருமுறை காடு ஒன்று தீப்பற்றி எறியும் போது, அதனை அணைப்பதற்கு அரசனிடம் கேட்டுக் கொள்கின்றனர். ஆனால் அகத்தியன்,

"அரசே!

தீஒரு தெய்வம் செம்புனல் தெய்வம்

காற்றொரு தெய்வம் செம்புனல் தெய்வம்

நிலம்ஒரு தெய்வம் நீ இதை உணர்க"

என்று நிலம், நீர், காற்று அனைத்து இயற்கையையும் கடவுளாகக் கட்டமைத்துள்ளதை அறியமுடிகிறது (Bharathidasan, 2009).

ஒருவனுக்கு ஒருத்தி என்பதனை புதிதாக உள்நுழைக்கிறார். தான் யாருடன் வாழ வேண்டும் என்பதை அந்த ஆணும் பெண்ணும் தான் முடிவு செய்வார்கள். அதனை ஒழித்து மந்திரங்கள் ஓதியே மணம் புரிய வேண்டும் என்று கட்டமைக்கிறார்கள். இப்படி தமிழர் பண்பாட்டியினைக் கொஞ்சம் கொஞ்சமாக ஆரிய பண்பாட்டோடு கலந்து செல்வதை பாரதிதாசன் விரும்பவில்லை என்பதனை இந்நாடகம் மூலம் அறியமுடிகிறது.

## முடிவுரை

பாரதிதாசன் என்ற ஆளுமை தனது படைப்புகள் மூலமாக திராவிடக் கருத்தான பெண் விடுதலை, பொதுவுடைமை, கடவுள் மறுப்பு, பார்ப்பனிய எதிர்ப்பு போன்றவற்றை வெளிப்படையாகவே தனது கவிதை மட்டுமல்லாமல், கவிதை நாடகம் வாயிலாகவும் பரப்புவதை அறியமுடிகிறது. வாசிப்பவர்கள் கதைகளில் உயிரோட்டமாக கலந்துக் கொள்ளமுடிகிறது. பெண்கள் வீரத்துடன் தான் இருப்பார்கள் என்பதனை வீரத்தாய் நாடகம் மூலம் அறிய முடிகிறது. அரசன் அனைத்து அதிகாரத்தையும் பெற்றவன் இல்லை, அவனும் ஒரு சாதாரண மக்களில் ஒருவன் என்பதனைக் கடல்மேற் குமிழி நாடகம் மொழிகிறது. தமிழர் பண்பாட்டை அழித்து ஆரிய பண்பாட்டை புகுத்திய அகத்தியன் பற்றித் தெளிவாக விளக்குகிறது. அகத்தியர் விட்ட புதுக்கரடி நாடகம். மனிதன் பகுத்றிவுடனும் சுயமரியாதையுடனும் வாழவேண்டும் என்பதே பாரதிதாசன் படைப்புகளில் அறியமுடிகின்ற செய்தியாகும்.

## References

Bharathidasan, (2009) Paavendham, Ilangani Pathippagam, Chennai, India.

Govindhasamy, M. (1957) Bharathidasan Kavithiran, Paari Nilaiyam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License